


# கர்ப்பிணிப் பெண்கள் ‘ப்ஃபைசர் கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்ளலாம்

**கர்ப்பிணிப் பெண்களுக்கு அவர்களுடைய கர்ப்பகாலத்தின் எவ்வொரு கட்டத்திலும் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து சிபாரிசு செய்யப்படுகிறது. கர்ப்பிணிப் பெண்களுக்கும் அவர்களுக்குப் பிறக்கவிருக்கும் குழந்தைக்கும் ‘கோவிட்-19’ காரணமாக கடும் நோய்வாய்ப்படும் ஆபத்து அதிகம்.**

உங்களையும் உங்களுக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையையும் பாதுகாத்துக்கொள்ள, மூன்று வார கால இடைவெளியில் ‘ப்ஃபைசர் தடுப்பூசி மருந்தின் இரண்டு மருந்தளவுகள் உங்களுக்குத் தேவைப்படும்.

தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்கள் எவ்வொரு சமயத்திலும் ‘ப்ஃபைசர்’ தடுப்பூசியை இட்டுக்கொள்ளலாம், மற்றும் தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு தொடர்ந்து தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கலாம்.

நீங்கள் கர்ப்பமாக இருந்தால், தடுப்பூசி இட்டுக்கொள்வதைப் பற்றி உங்களுடைய மருத்துவருடன் பேசுவதற்கான சந்திப்புவேளை ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

மேலதிகத் தகவல்களுக்கு **health.gov.au/covid19-vaccines-languages**, எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள், அல்லது **1800 020 080-ஐ அழையுங்கள்.**

மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு
**131450-ஐ அழையுங்கள்.**